


**05. 02. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மாநிலங்களவையில் இன்று பதிலளிக்கிறார்.

2. மக்களவையில் குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் இன்று குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

3. தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

34 ஆயிரத்து 237 கோடி ரூபாய் மதிப்பிலான 15 திட்டங்களுக்கு இதில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

5. தர்மபுரி தொப்பையாறு அணையிலிருந்து பாசனத்திற்கான இன்று தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

மாநிலங்களவை

குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மாநிலங்களவையில் இன்று பதிலளிக்கிறார்.

மாநிலங்களவையில் இதனைத் தெரிவித்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, பிரதமரின் உரையை அனைத்து உறுப்பினர்களும் கேட்க விரும்புவதாகவும், ஆனால் காங்கிரஸ் கட்சி மட்டும் அதனை புறக்கணிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

மக்களவை எதிர்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி நாட்டின் நலனுக்கானவற்றை பேச அனுமதி வழங்கப்படவில்லை என்ற மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேயின் குற்றச்சாட்டை திரு. ரிஜிஜு நிராகரித்தார்.

திரு. ராகுல் காந்தி நாடாளுமன்ற விதிகளுக்கு அப்பாற்பட்டு செயல்படுவதாக திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டினார்.

மக்களவை சார்ந்த விஷயங்களை மாநிலங்களவையில் பேசக்கூடாது என்று மாநிலங்களவை முன்னவர் திரு. ஜே.பி.நட்டா தெரிவித்ததோடு, எப்பிரச்சனை குறித்தும் விவாதிக்க பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு தயாராக இருப்பதாக கூறினார்.

ஆனால் எதிர்கட்சிகள் அவை நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைப்பதாகவும் குறை கூறினார்.

எதிர்கட்சிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப இந்தியா, அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்து மத்திய அமைச்சர் திரு. பியூஷ்கோயல் அவையில் அறிக்கை தாக்கல் செய்ததையும் திரு. ஜே.பி.நட்டா சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை

நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் இன்று குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

அவை இன்று ஒத்திவைப்பிற்கு பின்னர் நண்பகல் கூடியதும் குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை கொண்டுவந்த அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா அதனை வாக்களிப்பிற்கு அனுமதித்தார்.

எதிர்கட்சிகளின் பலத்த அமளியினூடே இந்த தீர்மானம் நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து 2026-27-ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை தொடர்பான விவாதம் மக்களவையில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும், அனைத்து உறுப்பினர்களுக்கும் பேச வாயப்பளிக்கப்படும் என்றும் திரு. ஓம்பிர்லா கூறினார்.

எதிர்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப் பட்டது.

முன்னதாக இன்று காலை 11 மணிக்கு அவை கூடியபோது எதிர்கட்சி உறுப்பினர்களின் நடத்தை குறித்து அதிருப்தி வெளியிட்ட திரு.ஓம்பிர்லா அவை மாண்பிற்கு எதிராக அவர்கள் செயல்படுவதாக குறை கூறினார்.

அவையின் மாண்பை காப்பது அனைத்து உறுப்பினர்களின் ஒட்டுமொத்த கடமை என்று எடுத்துரைத்தார்.

அவையின் கண்ணியம் காக்கப்படாவிட்டால் அவையை சுமூகமாக நடத்துவது இயலாத காரியம் என்றும் கூறி அவையை நண்பகல் வரை ஒத்திவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜீதேந்திரா சிங்

பாரத் ஜென் செயற்கை நுண்ணறிவு தளத்தில் அரசியல் சாசன எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளையும் பதிவேற்றும் பணிகள், இந்த மாத இறுதிக்குள் நிறைவடையும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜீதேந்திரா சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், இந்தியாவின் சுயசார்பு தொழில்நுட்ப பாதையில் பாரத் ஜென் முக்கிய பங்காற்றுவதாகவும், ஆளுமை, படைப்பாற்றல் திறன் பொதுசேவை விநியோகம் போன்றவற்றில் இது இன்றியமையாக பங்களிப்பதாகவும் எடுத்துரைத்தார்.

நாட்டின் பிரம்மாண்ட மொழியியல் பன்முகத் தன்மையை செயற்கை நுண்ணறிவு மற்றும் மின்னணு தொழில்நுட்பங்கள்

மூலம் முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. ஜீதேந்திரா சிங் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அர்ஜுன் ராம் மெஹ்வால்

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நீண்டகால வழக்குகளுக்கு தொழில்நுட்ப உதவியுடன் தீர்வுகாண அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக மத்திய சட்ட மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெஹ்வால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், நரேந்திரமோடி அரசின் ஆட்சியில் நீதிமன்றங்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 893 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

3-வது கட்ட நீதிமன்ற மின்னணு திட்டத்திற்காக மத்திய அரசு 7 ஆயிரத்து 210 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

கூட்டுறவுத்துறையின் பாரத் டாக்ஸி திட்டம் அனைத்து தரப்பு மக்களையும் ஒருங்கிணைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்த திட்டம் தொடங்கப்படுவதன் முன்னோடியாக அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்

பதிவில் இந்த திட்டத்தில் பெரிய துவக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மக்கள் பங்களிப்புடன் சிறுசிறு மூலதனங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பாரத் டாக்ஸி திட்டம் குடிமக்களுக்கு மட்டுமல்லாமல் இதன் முதலாளிகளுக்கும் லாபத்தையும், மதிப்பையும் ஏற்படுத்தும் என்றார்.

டாக்ஸி ஓட்டுநர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதம் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆன்டோனியா குட்ரஸ்

புதுதில்லியில் வரும் 19-ம் தேதி தொடங்கவுள்ள செயற்கை நுண்ணறிவு மாநாட்டிற்கு இந்தியா தலைமை ஏற்பதற்கு ஐ. நா. பொதுச்செயலாளர் திரு. ஆன்டோனியா குடரஸ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் தாம் பங்கேற்க இருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், செயற்கை நுண்ணறிவு சவால்களையும், எதிர்கொள்வதிலும் புதிய வாய்ப்புகளுக்கான திறவுகோல் குறித்தும் அனைத்து நாடுகளும் விவாதிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

500க்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப்நிறுவனங்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 35 ஆயிரம் பேர் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தமிழக அமைச்சரவை கூட்டம்

தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

34 ஆயிரத்து 237 கோடி ரூபாய் மதிப்பிலான 15 திட்டங்களுக்கு இதில் ஒப்புதல் வழங்கப்பட்டதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. T.R.B. ராஜா தெரிவித்துள்ளார்.

இந்த புதிய முதலீடுகள் மூலம் 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பிற்கு வகை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தமிழ்நாடு அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கை குறித்து அமைச்சரவை கூட்டத்தில் இன்று அலோசிக்கப் பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

இதனிடையே முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை மாநகராட்சி சார்பில் பலகோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து இன்று தொடங்கி வைத்தாார்.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியம் சார்பில் 635 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 பணிகளை துவக்கிவைத்த அவர், மாநகராட்சி சார்பில் 86 கோடி ரூபாய் செலவில் முடிவடைந்த 63 திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார்

இந்துசமய அறநிலையத்துறை சார்பில் தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான நிர்வாகத்தில் உள்ள திருக்கோவில்களுக்கு 8 கோடி ரூபாய் மானியம்,

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திருக்கோவில்களின் பராமரிப்பிற்காக 18 கோடி ரூபாய் மானியம் உட்பட 36 கோடி ரூபாய் நிதியுதவியை பல்வேறு திருக்கோவில்களுக்கு முதலமைச்சர் வழங்கினார்.

ஆன்மீக பயணம் மேற்கொண்ட 389 பக்தர்களுக்கு ஒருகோடியே 17 லட்டம் ரூபாயை மானியமாக வழங்கினார்.

முன்னதாக 65 வயதிற்கு மேற்பட்ட 10 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினை பொக்கிஷ விருதுகளையும், 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

சென்னை சேப்பாக்கம் கலைவாணர் அரங்கில் கைவினை பொருட்கள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கையும் அவர் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

Patrick Herminie

செஷல்ஸ் அதிபர் டாக்டர் Patrick Herminie சென்னையில் இன்று சிம்ஸ் மருத்துவமனை மற்றும் பாலாஜி பல் மருத்துவமனையையும் பார்வையிடுகிறார்.

நாளை தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவியை அவர் சந்தித்து பேசுகிறார்.

தமது இந்திய பயணத்தின் ஒருபகுதியாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆகியோருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்தியா செஷல்ஸ் தூதரக உறவுகள் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அதிபர் பேட்ரிக்கின் இந்திய பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆளுநர்

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் 24-வது பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழக வேந்தரும் தமிழக ஆளுநருமான திரு. ஆர்.என்.ரவி மாணாக்கருக்கு பட்டங்களை இன்று வழங்கினார்.

இதில் முனைவர் பட்ட ஆய்வை நிறைவுசெய்த 358 பேருக்கும், இளங்கலை பாடப்பிரிவில் முதலிடம் பிடித்த 110 பேருக்கும் தங்கப்பதக்கத்துடன் சான்றிதழ்களை ஆளுநர் அளித்தார்

சேலம், தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இணைவு பெற்ற கல்லூரியை சேர்ந்த 46 ஆயிரத்து 532 மாணாக்கரும், பெரியார் பல்கலைக்கழகத்தின் ஆயிரத்து 207 மாணாக்கரும் ஆளுநரிடமிருந்து பட்டங்களை பெற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

நாகை மாவட்டத்தில் பரவலாக இன்று பெய்த மழையினால் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சம்பா பருவ அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

தண்ணீர் திறப்பு

தர்மபுரி மாவட்டம் தொப்பையாறு நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சதீஷ் இன்று திறந்து வைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

தமிழ்நாடு சட்டப்பேரவை மதிப்பீட்டு குழுவினர், அதன் தலைவர் திரு. காந்திராஜன் தலைமையில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் சீரமைப்பு பணிகளை பார்வையிட்டனர்.

வீரவ சந்தத ராயர் மண்டப புனரமைப்பு பணிகளையும் ஆய்வுசெய்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖